# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2023.04.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

***(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**_சட்டப்பயன் பற்றிய கூற்று_**

***வாசகம் 2 :*** *(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 431அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், இவ்வாசகத்தின் சட்டப்பயனானது வழக்கு ஆளொருவரின் ஊறுக்கான இழப்பீட்டிற்கான ஒன்றாகவிருக்குமிடத்து, நீதிமன்றத்தின் அனுமதியுடன் மருத்துவ பரிசோதனைகளை நடாத்துவதற்கு புதிய ஏற்பாட்டை செய்வதற்கானதாகும்.*

# குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
# (திருத்தம்)

ச. வ.- ஓ. 35/2021

## (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(101 ஆம் அத்தியாயத்தில்) 431அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**2**. (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 431 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டக்கோவையின் 431அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

**“ஈ - மருத்துவப் பரிசோதனைகளுக்கான ஆணைகள்**

*மருத்துவ பரிசோதனை களுக்கான ஆணைகள்*

431அ. (1) (அ) வழக்கானது ஆளுக்கேற்பட்ட ஊறுபாட்டுக்கான சேதவீடுகளுக்கானதொன்றாக இருக்கின்றவிடத்து, நீதிமன்றமானது எவரேனும் திறத்தவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையவும், நீதிமன்றத்தினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டவர்களும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களும் ஆனால் மூன்றை விஞ்சாதவர்களுமான மருத்துவத் தொழிலர்களினாலான மருத்துவப் பரிசோதனைக்கு அவரை உட்படுத்தும்படி ஊறுபாடுற்ற ஆளுக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பரிசோதனையின் மேல், அறிக்கையானது, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அத்

தேதிக்கு முன்னர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். அத்தகைய அறிக்கை ஒவ் வொன்றினதும் பிரதியொன்று திறத்தவர்களுள் ஒவ்வொருவருக்கும் சேர்ப்பிக்கப்படுவதனை நீதிமன்றம் உடனடியாகச் செய்வித்தல் வேண்டும்.

(2) ஓர் அவதானிப்பாளராக அல்லது அவ தானிப்பாளர்களாக அத்தகைய பரிசோதனையில் சமுகமாக இருப்பதற்கு ஒரு வழக்குக்கான எவ ரேனும் திறத்தவருடைய தெரிவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவத் தொழிலர்களை அத்தகைய திறத்தவர் கொண்டிருத்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) ஊறுபாடுற்ற ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்றவிடத்து அல்லது மறுக்கின்றவிடத்து, நீதிமன்றமானது, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் அத்தகைய தவறுகை அல்லது மறுத்தல் காரணமாகத் தகுந்தமுறையில் செய்யப்பட முடியுமானவாறான அத்தகைய எல்லா ஊகங்களையும் அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்வதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(4) அத்தகைய அறிக்கை அல்லது அறிக்கைகள், மேற்கொண்ட எண்பிப்பின்றி, விளக்கத்தில் அவற் றின்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள்பற்றிய சான் றாகப் பயன்படுத்தப்படலாம்:

ஆயின், நீதிமன்றமானது, வழக்குக்கான எவரேனும் திறத்தவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதும் அது தீர்மானிக்கக்கூடிய வாறாகச் செலவுதொகைகள் பற்றிய அல்லது வேறுவகையான அத்தகைய நியதிகளின்மேலும், மருத்துவத்தொழிலர் கட்டளை விட்டழைக்கப்பட்டு அறிக்கையிலிருந்து அல்லது அதன்கண்ணுள்ள நிகழ்வு பற்றிய ஏதேனும் கூற்றிலிருந்து அல்லது

அதிலிருந்து விட்டுவிடப்பட்டுள்ளதென எவரேனும் திறத்தவரினால் சார்த்தப்படுகின்ற இயைபான ஏதேனும் நிகழ்விலிருந்து எழுகின்ற அல்லது இது சம்பந்தமான ஏதேனும் கருமத்தின்மீது வாய்மொழி மூலம் விசாரிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) நீதிமன்றம் ஒவ்வொன்றும் அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்ற அல்லது தொழிலில் ஈடுபடும் எந்த மருத்துவ தொழிலர்களுக்கு மருத்துவப் பரிசோதனையொன்றுக்காக (1)(அ) என்னும் உட்பிரிவின்கீழ் கட்டளை ஆக்கப்படமுடியுமோ அந்த மருத்துவ தொழிலர்களின் நிரலொன்றை காலத்துக்குக்காலம் தயாரித்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், நீதிமன்றம் அத்தகைய நிரலில் எவரேனும் மருத்துவ தொழிலரின் பெயரை உள்ளடக்குவதற்கு முன்பதாக அத்தகைய மருத்துவ பரிசோதனையை பொறுப்பேற்பதற்கு அத்தகைய மருத்துவ தொழிலரின் கிரமமான வருகைதரு தன்மையை ஆய்ந்தறிய அவசியமாகக் கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ''மருத்துவத் தொழிலர்'' என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவையுடன் பதிவுசெய்யப்பட்ட ஒரு மருத்துவத்தொழிலர் என்று பொருளாகும்.''.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.